# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட / முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
2014/2015 (பெப்ரவரி 2018)

## OTL 3163 Writing for Media

நேரம்: 3 மணித்தியாலங்கள்

பகுதி – I இல் இருந்து இரு வினாக்களையும் பகுதி – II இல் இருந்து மூன்று வினாக்களையும் தேர்வு செய்து மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக

---

## பகுதி I

1. (அ) பத்தி எழுத்தின் இயல்புகள் யாவை? (10 புள்ளிகள்)

   (ஆ) அவ்வியல்புகள் வெளிப்படுமாறு இரு பத்தி எழுத்துக்கள் எழுதுக. (10 புள்ளிகள்)

2. (அ) நேர்காணலின் வகைகள் எவை? சுருக்கமாகக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

   (ஆ) ஓய்வுபெற்ற கல்விப்பணிப்பாளர் ஒருவரை பத்திரிகை ஒன்றிற்காக நேர்காண்க. (15 புள்ளிகள்)

3. (அ) வானொலி நாடகத்தின் இயல்புகள் யாவை? சுருக்கமாகக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)
   (ஆ) அலைபேசி ஏற்படுத்தும் தீமைகள் பற்றி வானொலி நாடகமொன்று எழுதுக. (15 புள்ளிகள்)

## பகுதி II

4. உமது பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் விளையாட்டுப் போட்டி ஒன்றை நேர்முக வர்ணனை செய்க. (20 புள்ளிகள்)
5. நீர் படித்த நாவலொன்று பற்றி பத்திரிகை ஒன்றில் நூல் அறிமுகம் செய்க. (20 புள்ளிகள்)

6. இலங்கையிலிருந்து வெளிவரும் தமிழ்ப் பத்திரிகையொன்றினைக் கவனத்திற்குட்படுத்தி அதில் வரும் விடயங்களை வகைப்படுத்தி அவை பற்றிய விளக்கமும் தருக. (20 புள்ளிகள்)

7. பின்வரும் பத்திரிகைச் செய்திகளை வாசித்து மூன்று நிமிடம் தொடக்கம் ஐந்து நிமிடம் வரையான வானொலிச் செய்தி அறிக்கை தயாரிக்குக. (20 புள்ளிகள்)
   (அ) மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆரையம்பதிப் பகுதியிலுள்ள வேட்பாளர் ஒருவரின் வீடு நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களினால் உடைக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடிப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

ஆரையம்பதி செல்வா நகர் கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி சார்பில் மண்முனைப்பற்றுப் பிரதேச சபையில் போட்டியிடும் பெண் வேட்பாளரின் வீ இவ்வாறு உடைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு வெளியில் சென்று வீடு திரும்பிய போது வீட்டின் முன்கத உடைக்கப்பட்டிருப்பதைக் கண்டதாகவும் வீட்டினுள் பொருட்கள் வீசப்ப நிலையிலிருந்ததாகவும் வேட்பாளர் தெரிவித்தார்.

(ஆ) ஈரானின் கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கக் கூடிய ஏவுகணை ஏவும் நிகழ்ச் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்து வந்ததாகக் குற்றஞ்சாட்டப்படும் அந்நாட்டைச் சேர் ஐந்து கம்பனிகளுக்கு எதிராக அமெரிக்கா புதிதாகத் தடைகளை விதித்துள்ளது.
மேற்படி கம்பனிகளின் ஏதாவது சொத்து அமெரிக்காவில் இருப்பின் அதனைப் பறிமுத செய்வது மற்றும் அந்தக் கம்பனிகளுடன் தொடர்புகளைப் பேணுவதிலிரு அமெரிக்கர்களைத் தடுத்தல் என்பவற்றை இந்தத் தடைகள் உள்ளடக்கியுள்ளன.
ஈரானின் அதிகரித்து வரும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித் அந்நாட்டினர் அண்மையில் கிளர்ந்தெழுந்தனர்.

(இ) மத்திய வங்கி பிணைமுறி குறித்து விசாரணை நடத்துவதற்கு நியமிக்கப்ப ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் பிரதியொன்றைத் தனக்கு வழங்குமா பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க ஜனாதிபதி செயலாளரி வேண்டுகோள்விடுத்துள்ளார்.

(ஈ) இராஜகிரிய சந்தியில் நீண்ட காலமாகப் பயணிகள் முகங்கொடுத்து வந்த வாக நெரிசலுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் இராஜகிரிய முச்சந்தியி நிர்மாணிக்கப்பட்ட மேம்பாலம் எதிர்வரும் எட்டாம் திகதி திங்கட் கிழமை ஜனாதிப மைத்திரிபால சிறிசேனவினால் திறந்துவைக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரி அறிவித்துள்ளது. இது தொடர்பாக ஜனாதிபதி ஊடகப் பிரிவுவிடுத்துள்ள அறிக்கையி தெரிவிக்கப்பட்டுள்ளதாவது......

(உ) தேசிய அரசாங்கமா? நாட்டின் எதிர்காலமா? என்று வந்தால் நிச்சயம் நாட்டின் நல கருதியே செயற்படுவோம். எனவே முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் மற்றும் பேப்பச்சுவல் நிறுவனத்தின் அர்ஜுன் அலோசியஸ் ஆகியோருக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.
சம்மந்தப்பட்ட அனைவருக்கும் எதிரான நடவடிக்கைக்கு தேவையான அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளன......